DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-65/2020

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முனியசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4 present)

03.02.2026– 12.05 PM

முதல் விசாரணை:–

1. நான் தற்போது ஏர்வாடி தர்ஹா காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 25.12.2020ம் தேதி சிக்கல் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக காவல் நிலைய அலுவலில் இருந்த போது சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் காவல் நிலைய வழக்கு கோப்புகளை பார்வையிட்ட போது மற்ற காவலர்களான பெண் முதல்நிலைக்காவலர் 1897 – திருமதி. செல்வப்பிரியா, முதல்நிலைக்காவலர் 2276 – திரு.முரளி, முதல்நிலைக்காவலர் 1162 – திரு.ராஜா, ஆகியோருடன் அவரவர்கள் பணியிலிருந்த போது 18.58 மணியளவில் சிறைக்குளத்தை சேர்ந்த யேசுதாஸ் அவருடைய மகன்கள் செல்லத்துரை, மற்றும் இன்னொரு நபரின் பெயர் தெரியவில்லை, அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். ( சாட்சி எதிரியை சரியாக அடையாளம் காட்டினார்) சிக்கல் மேற்கு காலணியை சேர்ந்த வடிவேல் ஆகியோர்கள் அதிகமான சத்தத்துடன் காவல் நிலையத்திற்குள் நுழைந்து "எவா பிளக்ஸ் போர்டை எடுக்கச்சொன்னது" ஊர் அறிந்த ரவுடி வந்திருக்கிறேன். மேஜையை தட்டிக்கொண்டு எதிரி யேசுதாஸ் பேசினார்.

3. அந்த இடத்தில் சார்பு ஆய்வாளரை தாக்குவதற்கு கம்புகளை வடிவேல் தேடிக்கொண்டு லுங்கியை ஏத்தி கட்டிக்கொண்டு சத்தம் போட்டார்.

இவட்ட என்ன பேச்சு கம்பை எடுத்து மண்டையை உடைப்போம் என்று அந்த 3 வது எதிரி கூறினார். போலீஸ்னா பெரிய இவனா என்று நாங்கள் ரவுடி குடும்பத்தார்கள் நாங்கள் சிக்கலில் வைத்ததுதான் வரிசை என்று வடிவேல் கூறினார். பின்பு நீ வெளியே வா காரை விட்டு ஏற்றி கொல்கிறோம் என்று எதிரி செல்லத்துரை கூறினார். கடந்த 24.12.2020 ம் தேதி இரவு 23.55 மணியளவில் செல்லத்துரை, வடிவேல், கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு 15 x 10 அளவு பிளக்ஸ் போர்டை சிக்கல் தேரிருவேலி சந்திப்பு ரோட்டில் பொதுமக்களுக்கு இடையூறாக வைத்தவரை இரவு ரோந்தில் இருந்த சிக்கல் காவல் நிலைய சார்ப ஆய்வாளர திருமதி.சாரதா முதல் நிலைக்காவலர் 2293 திரு.சத்தியமூர்தத, 1162 – ராஜா, ஆகியோருடன் இந்த இடத்தில் பிளக்ஸ் போர்டை வைக்கக்கூடாது ஏற்கனவே உயர்நீதிமன்றம் தடை உத்தரவு உள்ளதால் அனுமதி பெற்று பிளக்ஸ் போர்டு வைங்கள் என்றும், 3 கி.மீ அப்பால் வரை சிக்கல் ஊருக்குள் கொண்டு வந்து வைத்தால் மற்ற கிராமத்தார்களும் பிளக்ஸ் போர்டு சிக்கல் ஊருக்குள் கொண்டு வந்து வைத்து விடுவார்கள் இதனால் சட்டஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது என்று பிளக்ஸ் போர்டை எடுத்துச்செல்லுங்கள் என்று கூறியவுடன் செல்லத்துரை, பிளக்ஸ் போர்டை எடுத்து செல்லும் போது நான் நாளைக்கு எனது அப்பா ரவுடியுடன காவல் நிலையம் வந்து வைத்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு சென்றது போல் இன்று வந்து பிரச்சனை செய்துள்ளார்கள் என்று தெரிந்துகொண்டேன். சிறிது நேரத்தில் காவல் நிலையம் வந்த சிக்கல் காவல் நிலைய மற்றொரு சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் அவரிடம் சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் நடந்த சம்பவத்திற்கு புகார் மனு கொடுத்தார். சிக்கல் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் இன்சர்வீஸ் பயிற்சிக்கு கமுதிக்கு சென்றுள்ளதால் பொறுப்பில் வகித்த ஏர்வாடி தர்ஹா காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் வந்து விசாரணை மேற்கொண்டார்கள் என்னையும் விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

இந்த வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை

செய்தார்கள் என்றால் 26.12.2020ம் தேதி சிக்கல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரணை செய்த ஆய்வாளரிடம் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் என்னுயை மேலதிகார் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த சமயத்தில் சிக்கல்காவல் நிலையத்தில் எழுத்தராக இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்தினம் நடந்த விவரங்களை சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா மற்றும் ரோந்து காவலர்கள் சொன்னதன் பேரில் தான் தெரியும். சம்பவத்திற்கு முன்தினம் நடந்த பிரச்சனை சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் திருமதி. சாரதா அவர்கள் எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்ல என்றால் சரிதான்.

பிளக்ஸ் போர்ட்டின் அளவு மற்றும் எது சம்மந்தமாக அந்த போர்டு சம்மந்தமாக வைக்கப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் கிறிஸ்துமஸ் சம்மந்தமாக 15 X 10 அடி என்ற அளவில் வைக்கப்பட்டது. இந்த அளவின் மற்றும் அந்த பிளக்ஸ் போர்ட்டின் தன்மை புகார்தாரர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தின் போது காவல் நிலையத்தில் 5 போலீசார் இருந்தோம், வெளியில் உள்ள போலீசார இருந்தார்களா என்று ஞாபகமில்லை. சம்பவத்தை காவலர்கள் தவிர வேறு தனிநபர்கள் பார்த்தார்களா என்றால் காவல்நிலையத்திற்கு எதிரே உள்ள கடைக்காரர்களுக்கு தெரியும், எங்கள் காவல் நிலையத்திற்கும் எதிரே உள்ள கடைக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 40 மீட்டர் துாரம் இருக்கும்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எங்கள் காவல் நிலையத்தில் பாரா போலீசார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சம்பவத்தின் போது எதிரிகளை கைது செய்வதற்கான முயற்சி எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளருக்கு தனி அறை எனக்கு தனிஅறை என்று தனித்தனியாக இருந்து தான் வேலை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் இந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் என்பதால் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை கைது செய்திருப்போம் என்றால் சம்பவம் நடந்தது உண்மை எதிரிகளை கைது செய்யவில்லை. இந்த வழக்கின் 1வது எதிரி ஒருஅரசியல் கட்சியின் ஒன்றிய செயலாளர் என்றால் சரிதான். அவர் அடிக்கடி காவல் நிலையம் வருவார் என்றால் சரியல்ல. வேறொரு வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளரான புகார்தாரருக்கும், 1வது எதிரிக்கும் ஏற்பட்ட முன்பகையின் காரணமாக சார்பு ஆய்வாளர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.05 18:26:33 +0530